**செய்தி வெளியீடு எண்:609** **நாள் :02.12.2014**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம்.**

மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் இன்று (02.12.2014) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயல்பாடுகள் குறித்து சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள், 528 பேரூராட்சிகளில் நடைபெற்று வரும் பணிகளின் செயல்பாடுகள் குறித்தும் இப்பகுதிகளில் வடகிழக்குப் பருவ மழையினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் அது குறித்து மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள். சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வாரியம் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் திட்டங்கள் மற்றும் பாதாளசாக்கடை திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் சட்ட மன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் மக்களின் முதல்வர் **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் சட்ட மன்ற பேரவை விதி 110–ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மானியக் கோரிக்கை அறிவிப்புகள், நிதிநிலை அறிவிப்புகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்களைக் கேட்டறிந்தார். இவ்வறிவிப்புகள் மீது தனி கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்து செயற்படுத்த வேண்டும் என அறிவுரை வழங்கினார்கள்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலர், திரு.க.பணீந்திர ரெட்டி இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி, சென்னை மாநகராட்சி, முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர், திரு. விக்ரம் கபூர் இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேலாண்மை இயக்குநர் திரு.விஜயராஜ்குமார்,இ,ஆ,ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.ராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய செயல் இயக்குநர் திரு,என்.சந்தீப் இ,ஆ,ப., அனைத்து மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்கள் தலைமைப் பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**